புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • செப்டம்பர் (SEPTEMBER) 24, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 38 • விலை(PRICE) ரூ.6.00



### சேலத்தில் கரைபுரண்ட உற்சாகம்

# பேரெழுச்சியுடன் வாகனப் பேரணி

## மேடையில் ஜாதிமறுப்புத் திருமணம்; கழக ஏட்டுக்கு நிதி!

**சேலம் கிழக்கு, மேற்கு மற்றும் மாநகரக் கழகங்கள் பெரியார் பிறந்தநாள் விழாக்களை எழுச்சியுடன் நடத்தினர்.**

சேலம் மேற்கு மாவட்டத்தில் தந்தை பெரியார் 148-வது பிறந்தநாள் விழா 17.09.2026 காலை 9 மணிக்கு கோனூர் சமத்துவபுரத்தில் தொடங்கி தார்க்காடு பகுதியில் இரவு 10 மணி வரை இருசக்கர வாகனப் பேரணியுடன் நடைபெற்றது. காலை 9 மணியளவில் கோனூர் சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

### நேரம் தவறாமை

கோனூர் சமத்துவபுரத்தில் இருசக்கர வாகனப் பேரணியை கழகத் தலைவர் தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் பேசுகையில் **தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் அணுகுமுறைகளை குறிப்பிட்டுப் பேசும்போது பெரியார் தன் வாழ்நாளில் நேரம் தவறாமையை கடைபிடிப்பார் என்றும், இந்த பெரியார் பிறந்த நாளில் நாம் உறுதியேற்பது இனி வரும் காலங்களில் கழக நிகழ்வுகளைக் குறித்த நேரத்தில் தொடங்குவதாக இருக்கவேண்டும் அதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.**

வெள்ளார் பகுதியைச் சேர்ந்த சு. கபிலன் கழகத் தலைவர் முன்னிலையில் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இருசக்கர வாகனப் பேரணி மல்லிகுந்தம், மேச்சேரி, பனங்காடு, மசக்காளியூர், கீழ் வனவாசி, வனவாசி மேல் ரோடு, நங்கவள்ளி பேருந்து நிலையம், தோப்புத்தெரு, வீரக்கல், ராமன் நகர், மேட்டூர் ஆர்.எஸ், காவேரி கிராஸ், மேட்டூர், கண்ணாமூச்சி, காவலாண்டியூர், கொளத்தூர், இறுதியாக தார்க்காட்டில் நிறைவு பெற்றது.

**மேச்சேரி ஒன்றியம்:** இருசக்கர வாகனப் பேரணியை வரவேற்று மாரிமுத்து, கேக் வெட்டி இனிப்புகள் வழங்கினார். மல்லிகுந்தம் பகுதியில் வைக்கப்பட்ட தந்தை பெரியார் படத்திற்கு அன்பழகன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. மேச்சேரி பேருந்து நிலையத்தில் சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவசண்முகம் தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தனர். தோழர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

**நங்கவள்ளி ஒன்றியம்:** வனவாசி கிளைக் கழகம் பனங்காடு பகுதியில் வனவாசி நகரத் தலைவர் செந்தில் தலைமையிலும், மசக்காளியூர் பகுதியில் வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், வனவாசி பேருந்து நிலையம் (கீழ் வனவாசி) இந்திராணி, வனவாசி மேல் ரோடு பகுதியில் வனவாசி நகரப் பொருளாளர் பன்னீர்செல்வம், நங்கவள்ளி நகரக் கழகத்தின் சார்பில் நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், தோப்புத்தெரு பகுதியில் நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வீரக்கல் பள்ளிக்கூடம் பேருந்து நிறுத்தத்தில் நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தோழர்களுக்கு காலை உணவு நங்கவள்ளி ஒன்றியக் கழக சார்பில் வழங்கப்பட்டது.

**மேட்டூர் ஆர்.எஸ் கிளை:** ராமன் நகர் பகுதியில் ஜஸ்டின்ராஜ் பேரணியில் வந்த தோழர்களுக்கு குளிர்பானம் வழங்கினார். ஆர்.எஸ். பெரியார் படிப்பகத்தில் கழகக் கொடியினை வழக்கறிஞர் அறிவுமதி தலைமையேற்று ஏற்றி வைத்து பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார். மேட்டூர் ஆர். எஸ் பகுதிகளில் பெரியார் பிறந்தநாள் விழா சுவரெழுத்துகள் எழுதப்பட்டு, சாலையின் இருபுறமும் 300-க்கும் மேற்பட்ட கழகக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ராமன் நகர், சாம்பள்ளி, ஆர். எஸ், தங்கமாபுரிபட்டினம் ஆகிய பகுதிகளில் பெரியார் வாசகங்கள் மற்றும் படங்கள் அடங்கிய உயர் மின்னொளி கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது.

**மேட்டூர் நகரம்:** காவேரி கிராஸ் பகுதியில் காளியப்பன், சின்ன பார்க் பகுதியில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், மேட்டூர் நகர பெரியார் படிப்பகத்தில் நகரத் தலைவர் மார்ட்டின் மற்றும் அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தத்தில் வைக்கப்பட்ட படத்திற்கு நகரச் செயலாளர் குமரப்பா ஆகியோர் தலைமையில் பெரியார் படம் மற்றும் பதாகைகளுக்கு மாலை அணிவித்து கழகக் கொடியேற்றினர். மேட்டூர் நகரம் முழுவதும் சுவர் எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தது. தோழர்களுக்கு மதிய உணவு சேலம் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் வழங்கப்பட்டது.




**கொளத்தூர் ஒன்றியம்:** கண்ணாமூச்சி பகுதியில் மூத்த தோழர் பொன்னுசாமி, காவலாண்டியூர் பெரியார் படிப்பகத்தில் சரசுவதி, கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன் தலைமையில் கழகக் கொடியினை ஏற்றி படத்துக்கு மாலை அணிவித்தனர். கொளத்தூரில் கணேசன் விழா ஏற்பாடுகள் செய்திருந்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி ஆகியோர் பள்ளிக் குழந்தைகளுக்கு பேனா, நோட்டு வழங்கினர். விசிக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள், மாணவர்கள், குழந்தைகள் கலந்து கொண்டனர்.

### தார்க்காட்டில் பொதுக்கூட்டம்

நிறைவாக தார்க்காடு பகுதியில் பொதுக்கூட்டம் மாலை 6:00 மணி அளவில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு தார்க்காடு கிளைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, தவாக மாவட்டத் துணைத் தலைவர் சக்திவேல், திமுக வழக்கறிஞர் சரவண பரத் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பொதுக் கூட்டத்தில் கார்த்திகா-கிருஷ்ணராஜன் ஆகியோரது ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் ஏரிக்காடு பெரியார்நகர் கிராம மக்கள் புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ.50,000 கழகத் தலைவரிடம் வழங்கினார்கள்.

குழந்தைகளுக்கான தனித்திறன் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தார்க்காடு பகுதியில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட இணையர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தார்க்காடு கிளைக் கழகத் தோழர்கள் அன்பரசு, சண்முகம், தினேஷ், அன்பழகன், பாரதிகண்ணன், குமரேசன் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.

ரூ.3,500 மதிப்புள்ள பரிசுப்பொருட்களை சேலம் மாவட்டப் பொருளாளர் சம்பத்குமார் அன்பளிப்பாக வழங்கினார். தோழர்களுக்கு இரவு உணவு கொளத்தூர் நகரக் கழகத்தினர் ஏற்பாடு செய்தனர். நிகழ்வில் காலை முதல் இரவு வரை மகளிர் அணித் தோழர்கள், சேலம் மேற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக, பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 4-ம் பக்கத்தில்

### தமிழ்நாடு மாணவர் கழகம் இளைஞரணி இணைந்து நடத்திய

## மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

தந்தை பெரியாரின் 148-வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகம் மற்றும் திராவிடர் விடுதலைக் கழக இளைஞரணி இணைந்து நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி "GEN-Z PERIYAR 2K26" செப்-20 அன்று கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் ஷர்மிளா தலைமை தாங்கினார்.



ஓவியப் போட்டியில் 25-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். முதல் பரிசை (ரூ.5,000/- மற்றும் புத்தகம்) பவானி, இரண்டாம் பரிசை (ரூ.3000/- மற்றும் புத்தகம்) கோபிகா, மூன்றாம் பரிசை (ரூ.2000/- மற்றும் புத்தகம்) ஜெசிதா ஆகியோர் வென்றனர். சுபாஸ்ரீ, பார்கவி, புவனேஷ் ஆகிய தோழர்களின் ஓவியங்களுக்கு சிறப்பு பரிசாக ரூ.1000 வழங்கப்பட்டது. சிறப்புப் பரிசுக்கான தொகையை ஓவியர் பரதன், வழக்கறிஞர்கள் இரண்யா, இளவரசன் மற்றும் எழிலரசன் வழங்கினர். போட்டியாளர்கள் அனைவருக்கும் நூல்களை 'எட்வின் புத்தக நிலையம்' சார்பில் வழங்கப்பட்டது.

நிகழ்வை சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண் மற்றும் மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு ஆகியோர் ஒருங்கிணைத்தனர். போட்டிக்கு ஓவியர் பரதன் நடுவராக இருந்து பரிசுக்குரிய ஓவியங்களைத் தேர்ந்தெடுத்தார். நீட் எதிர்ப்புக் கூட்டியக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மணிரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் முதல் கையெழுத்திட்டார். ஓவியப் போட்டியில் வென்றவர்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஓவியர் பரதன், கக்காஷி (WSR), வழக்கறிஞர்.சிவா (The Next public) ஆகியோர் பரிசுகள் வழங்கி, வாழ்த்துரையாற்றினர். கலந்துகொண்ட அனைத்து போட்டியாளர்களின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. சைதாப்பேட்டை இசக்கிமுத்து, ஆவடி செந்தில் ஆகியோர் தங்களை இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.



### பங்கேற்ற மாணவிகள் நெகிழ்ச்சி உரை

போட்டியில் மாணவிகள் பெருமளவில் பங்கேற்றனர். பெண்ணுரிமை ஜாதி ஒழிப்பில் பெரியாரின் பங்களிப்பை தங்களின் கற்பனைத் திறனில் ஓவியங்களாகத் தீட்டியிருந்தனர். ஓவியங்கள் சிறப்பாக இருந்ததால் கூடுதலாக மூன்று பேருக்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. போட்டிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் 'பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்' நூல் தங்களிடம் மாற்றத்தை உருவாக்கியதை நெகிழ்ச்சியுடன் கூறினார்கள். ஒரு இஸ்லாமிய மாணவி தனது குடும்பத்துக்குத் தெரியாமல் இந்த நூலைப் படித்து முடித்ததைக் குறிப்பிட்டார். பெரியார் பெண்ணடிமை, ஜாதி ஒழிப்புக்கு எதிராகவே கடவுள் மறுப்பை பேசியதை ஒரு மாணவி விளக்கிப் பேசினார். தனது ஓவியத்திலும் இந்த கருத்தையே வரைந்தார்

நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட துணைச் செயலாளர் இராவணன், மாவட்ட அமைப்பாளர்கள் எட்வின் பிரபாகரன், தட்சிணாமூர்த்தி, உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

தலையங்கம்

# ‘மநு’வுக்கு சவால் விடும் பன்றிகள்

உலகிலேயே முதல் முறையாக பன்றியின் சிறுநீரகத்தை மனிதருக்கு பொருத்தும் மருத்துவப் புரட்சி அமெரிக்காவில் மாசூசெட்ஸ் மருத்துவமனையில் நடந்து இருக்கிறது. டிம் ஆண்ட்ரூஸ் என்ற 66 வயது அமெரிக்கருக்கு பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்டு, 271 நாள் அவர் டயாலிசிஸ் சிகிச்சை இல்லாமல் உயிர் வாழ்ந்திருக்கிறார். உலகின் முதல் சாதனை இது என்று பிரபல ’லேண்ட்செட்’ ஆராய்ச்சி இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி-25,2025 பன்றி சிறுநீரகம் பொருத்தப்பட்டவுடன் ஆண்ட்ரூஸ் உடல் அதை ஏற்றுக் கொண்டது. 14 வது நாளில் உடல் ஏற்க மறுத்தபோது மருத்துவர்கள் அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். 6 மாதம் வரை சிறுநீரகம் நன்றாகவே வேலை செய்தது. டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படவே இல்லை. திடீரென்று உடலில் நோய் தொற்று ஏற்பட்டது. இது பன்றி சிறுநீரகத்தால் ஏற்பட்டது அல்ல. மருத்துவர்கள் நோய் தொற்றுக்கு சிகிச்சை செய்தனர். ஆனாலும் சிறுநீரகத்தை உடலுடன் இணைக்கும் ரத்த நாளங்கள் செயலிழந்தது. இதனால் பன்றியின் சிறுநீரகம் வேலை செய்வதை நிறுத்திக் கொண்டது. இதற்குப் பிறகு பன்றியின் சிறுநீரகத்தை எடுத்து விட்டு மனித சிறுநீரகத்தை பொருத்தி நோயாளியை மருத்துவர்கள் காப்பாற்றி விட்டனர்.

பன்றியின் உறுப்புகளை மனிதர்களுக்கு பொருத்தும் ஆய்வுகள் கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகின்றன. இது முதல் கட்ட சாதனை என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். உறுப்பு மாற்று சிகிச்சைக்குக் காத்திருப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் உறுப்புகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

இந்தியாவில் சிறுநீரக மருத்துவ சிகிச்சைக்காக இரண்டு லட்சம் பேர் காத்திருக்கிறார்கள். ஆனால் 14 ஆயிரத்து 500 பேருக்கு மட்டுமே உறுப்புகள் கிடைத்துள்ளன. இந்த நிலையில் உயிரைக் காப்பாற்ற அவசரமாக உறுப்புகள் தேவைப்படுபவருக்கு உடனடியாக பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி மாற்று சிறுநீரகம் கிடைக்கும் வரை உயிரைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் இந்த மருத்துவப் புரட்சியின் வெற்றி. பன்றியின் சிறுநீரக அளவு, அமைப்பு, தோற்றம் மனித சிறுநீரகம் போலவே இருக்கிறது என்பதால் பன்றியின் சிறுநீரகம் பயன்படுத்தப்படுகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

தலையில் இருந்து ‘பிராமணர்’களையும் காலிலிருந்து ‘பிராமணர்’களின் அடிமைகளான ‘சூத்திரர்’களையும் ‘பிரம்மா’வே படைத்தார் என்று மநு சாஸ்திரத்தை இங்கே பார்ப்பனர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த நான்கு வர்ணத்தையும் தானே படைத்ததாக கிருஷ்ண பகவான் கூறுவதாக பகவத் கீதையில் எழுதி வைத்துள்ளனர். மனித உறுப்புகளுக்கு வர்ணாசிரமப் பாகுபாடு கற்பித்த கூட்டம் உடலுக்கும் ஜாதிப் பாகுபாடுகளை திணித்தது. ’தீண்டப்படாத’ உடல்களை உருவாக்கியது. பெண்களுக்கான உடல்களை அடிமைப் பட்டியலில் சேர்த்தது. இப்போதும் பூணூல் அடையாளத்துடனான பார்ப்பன உடல் தான் கருவறைக்குள் நுழைகிறது. குடமுழுக்கு நடத்துகிறது. யாகசாலையில் வேத மந்திரம் ஓதுகிறது.

ஆனால் தலையில் பிறந்த உடலுக்கும், காலில் பிறந்த உடலுக்கும் நோய் உண்டு; பசி உண்டு; மனைவி உண்டு; குடும்பம் உண்டு; குழந்தைகள் உண்டு; ஏன், மரணமும் உண்டு.

‘பிரம்மா’ உருவாக்கிய உடல்களைக் காப்பாற்ற இப்போது பன்றிகள் தான் உயிர்ப்பிச்சை தருகின்றன. எந்த ஒரு ஜாதிக்காரனும் தங்கள் குடும்பத்தினரின் உயிர் காக்க உறுப்புகளுக்காகக் காத்திருக்கும் போது ஜாதியைக் கேட்பதில்லை. உறுப்புகள் கிடைத்தால் போதும் ஜாதி வேண்டாம்; மதம் வேண்டாம் என்கிறார்கள்.

பெரியார் கேட்டார்;

“மனிதனிடம் தான் உயர்ந்த ஜீவன் என்று சொல்லிக் கொள்ள எந்த ஒரு தனிப்பட்ட குறிப்பும், அடையாளமும் இல்லை என்றே சொல்லுவேன். மனிதனால் எண்ணப்படும், பேசப்படும், செய்யப்படும் காரியங்களில் எதிலாவது மற்ற ஜீவன்களை விட உயர்ந்த தன்மை ஏதாவது இருக்கிறதா?என்று பார்த்தால் அவற்றில் மற்ற ஜீவன்களைவிடத் தாழ்ந்த தன்மைகள் பல இருப்பதாகச் சொல்லலாமே தவிர, உயர்ந்த தன்மையைக் குறிக்க ஒன்றேனும் காண முடியவில்லை” என்றார்.

எந்த விலங்குகளும் ஜாதி பார்ப்பதில்லை; எந்தப் பறவைகளுக்கும் தீண்டாமை தெரியாது. மதங்களையோ, மத அடையாளங்களையோ ஏற்பதில்லை. ஆனால் ‘பகவான்’ படைத்தாகக் கூறும் வர்ணாஸ்ரம, ஜாதிய மனித உடல்களைக் காப்பாற்ற பன்றிகள் தான் தேவைப்படுகின்றன. ஆம் பகவத்கீதைக்கும் ‘மநு’வுக்கும் பன்றிகள் சவால் விடுகின்றன.

# அரசியலில் மாபெரும் ஊழல் கட்சித்தாவல்

ஊழல் ஒழிப்பு பேசும் விஜய் கட்சி, மாபெரும் அரசியல் ஊழலை முன்வைத்து மதுராந்தகம் தாராபுரம் இடைத்தேர்தலில் வாக்கு கேட்கிறது. கடந்த தேர்தலில் விசில் சின்னத்தை எதிர்த்து இரட்டை இலைக்கு வாக்கு கேட்டவர்கள் இப்போது அதே மக்களிடம் வந்து விசில் சின்னத்திற்கு வாக்கு கேட்கிறார்கள். இது வாக்களித்த மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம் என்று நாம் கூறவில்லை; உயர்நீதிமன்றமே பொறுக்க முடியாமல் மனம் திறந்து கூறியிருக்கிறது. கூறியது உயர்நீதிமன்றம் என்பதால் இது திமுகவின் சதி என்று கூற முடியவில்லையே என்று கலங்கி நிற்கிறார்கள் விஜய் பிரச்சார பீரங்கிகள். கடந்த தேர்தலில் நாட்டில் அன்றாடம் நடக்கும் வன்முறைகளை எல்லாம் திமுக ஆட்சியின் மீது பழி போட்டு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக மேடை தோறும் முழங்கினார் விஜய். இப்போது வன்முறைகள் பன்மடங்கு அதிகரித்த நிலையில் பதில் கூற முடியவில்லை.

மீனவர்கள் பகுதியில் கல்வி நிறுவனங்கள் மக்கள் குடியிருப்புகள் நெருக்கமாக இருப்பதை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் ஐந்து நாட்களில் அவசரமாக பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டப் போகும் அறிவிப்பு அரசாணையாக வெளிவந்தது. ஜோதிடர்களின் ஆலோசனையாக இருக்கலாம். இந்த ஆலோசனைகள் மக்கள் எதிர்ப்பலைகளில் மூழ்கிவிடும் என்று அவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. பல்கலைக்கழகங்கள் துவங்குவதற்கான இடத்தின் அளவு கட்ட வேண்டிய தொகை ஆகியவற்றை கணிசமாகக் குறைத்து, தனியார் பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் பெருகுவதற்கு அவசரமாக எந்த விவாதமும் இன்றி தமிழ்நாடு சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டது. தனியார் பல்கலைக்கழகங்களின் கீழ் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டு விட்டால் அது வணிகமயமாகும்; இட ஒதுக்கீடு கொள்கை முறையாக பின்பற்றப்படாமல் சீர்குலைக்கப்படும்.

விமான நிலையங்களை அதானிக்கு கையளித்து வரும் மோடி ஆட்சிக்கு சிவப்புக் கம்பளம் விரித்து ஆதரவுக் கரம் நீட்டுகிறார் முதல்வர் விஜய். சென்னை விமான நிலையத்தை தனியாரிடம் ஒப்படைக்க பரிந்துரைத்து ஒன்றிய அரசுக்கு கடந்த ஆகஸ்ட் மாதமே கடிதம் எழுதி அந்தச் செய்தியை தமிழ்நாட்டு மக்களிடம் வெளிப்படுத்தாமல் மறைத்திருக்கிறார் முதலமைச்சர் விஜய். இதற்காக அரசு ரகசியத்தை வெளிப்படுத்தித் தேசத்துரோகம் இழைத்து விட்டது திமுக என்று வழக்கு போட்டாலும் ஆச்சரியமில்லை. தேர்தல் முடிந்த குறுகிய காலத்திலேயே கட்சிமாறி வந்தவர்களை அவர்கள் சொந்த விருப்பத்தில் வருகிறார்கள்; எங்களுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று சாதித்தார்கள். இப்போது அதே கட்சி மாறிகளை தங்கள் கட்சி சின்னத்தில் தேர்தலில் நிற்க வைத்து தாங்கள் நடத்திய பேரத்தின் அடிப்படையில் தான் கட்சியில் சேர்ந்தார்கள் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திமுக கூட்டணியில் வெற்றி பெற்று ஓட்டுகளை வாங்கி பிறகு தவெக கூட்டணிக்கு மாறி பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்த இடைத்தேர்தலில் கட்சி மாறி வேட்பாளர்களுக்காக பிரச்சாரக் களத்தில் இறங்கப் போகிறார்கள். சமூகத்தில் மிகப்பெரும் ஊழல் ஜாதி; அரசியலில் மிகப்பெரும் ஊழல் கட்சித் தாவல். இப்போது அரசியல் ஊழலுக்கு வாக்கு கேட்க வந்திருக்கிறது; ஊழலை ஒழிக்கப் போவதாக தம்பட்டம் அடிக்கும் விஜய் கட்சியும் அதன் கூட்டணி விசுவாசிகளுக்கும் மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

விடுதலை இராசேந்திரன்
20.09.2026

# ‘கயிறு’ நாடகம் காலத்தின் தேவை!

பதிப்புத் துறையில் புரட்சி செய்து வரும் சீர் வாசகர் வட்டம் கலைத்துறையிலும் கால் பதித்து இருக்கிறது. கடந்த செப்டம்பர் 14ஆம் தேதி சென்னை தியாகராயர் அரங்கில் நிகழ்த்தப்பட்ட "கயிறு" நாடகம் மிகச்சிறப்பாக இருந்தது. பள்ளி மாணவர்களிடையே ஜாதி அடையாளத்தைத் திணிக்க ஜாதிச் சங்கங்கள் கட்டி வரும் ஜாதிக் கயிறுகளை மய்யமாகக் கொண்டு எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய ’கயிறு’ சிறுகதையை ஒரு ரூபாய் விலை நிர்ணயித்து லட்சக்கணக்கில் மக்களிடையே கொண்டு சேர்த்த சீர் பதிப்பகம், அதே கதையை இப்போது நாடகமாக அரங்கேற்றி இருக்கிறது.

பள்ளிகளில் தலித் மாணவர்கள் மீது ஜாதி வெறி ஆசிரியர்களின் பாகுபாடு; பள்ளிகளை சுத்தம் செய்யும் வேலைகளை, தலித் மாணவர்களுக்கு ஒதுக்கும் அவலம்; துரோணாச்சாரிகள் ஏகலைவன் கட்டை விரலை தட்சணைக்காக வெட்டி எடுப்பது; குடும்பங்களில் மறுக்கப்படும் பெண் உரிமை; தூய்மைத் தொழிலாளி பெண்ணின் மனிதநேயம் என்று ஒவ்வொரு காட்சியையும் நவீன நாடகத்துக்கு உரிய வடிவங்களோடு மிகச் சிறப்பாக நெறிப்படுத்தியிருக்கிறார் தோழர் அமலா இசடோரா. ஒவ்வொரு காட்சியிலும் அவரது ஆற்றல் வெளிப்படுகிறது.





நாடகத்தின் மய்யமான மிக முக்கிய காட்சி ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும்; ஜாதிக் கயிறுக்கான கருத்தியலை வழங்குவது "பிராமணியத்தை" உறுதிப்படுத்தும் பூணூல் கயிறுதான் என்று ஒரு பார்ப்பன கதாபாத்திரத்தின் வழியாக நாடகம் உணர்த்துகிறது. நாடகக் கதையின் மய்யம் இதுதான். ஜாதிக் கயிறுகளை எதிர்ப்பது என்பது ஏதோ ஒரு ஜாதிக்கான எதிர்ப்பு என்ற எல்லையோடு நின்று விடாமல் அது பார்ப்பனியத்தின் ஜாதி அமைப்புக்கான எதிர்ப்பு என்ற கருத்தை மிகச் சரியாக துல்லியமாக வெளிப்படுத்திய காட்சி இது! உண்மையை மிகத் துணிவோடு உரத்துக் கூறிய நாடகக் குழுவினரை பாராட்ட வேண்டும். கலை வடிவத்துக்கே உரிய உணர்வுகளோடு ஜாதி எதிர்ப்பை பார்வையாளர்களிடம் கடத்துவதில் மிகப்பெரும் வெற்றி பெற்று இருக்கிறது. இந்த நாடகம் பார்வையாளர்களை இருக்கையில் கயிறுகளால் கட்டிப்போட்டு விட்டது.

தமிழ்நாடு முழுதும் இந்த நாடகம் மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டிய தேவை இருக்கிறது. பதிப்புத் துறையை மக்கள் இயக்கமாக மாற்றிவரும் சீர் குழுவினருக்கு என்றும் துணை நிற்போம்.

# கழக ஏட்டுக்கு நன்கொடை

**கழகத் தலைமைக்குழு உறுப்பினர் நா.இளையராசா ‘அர்பன் குடில்’ கட்டுமான நிறுவனத்தின் சார்பாக கழக ஏட்டுக்கு ரூ.10,000 நன்கொடையாக வழங்கியுள்ளார்.**

**ஈரோடு கணகுறிஞ்சி பெரியார் பிறந்தநாள் முன்னிட்டு ரூ.2000 நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).**

# எழுச்சியுடன் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாக்கள்

**சென்னை:** மாவட்டக் கழகத்தின் சார்பில் செப்டம்பர் 17 - 2026 தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு ராயப்பேட்டை பத்ரி நாராயணன் நினைவு பெரியார் படிப்பகத்தில் உள்ள பெரியார் சிலைக்கு கழக பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன், தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தொடர்ந்து அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.



நங்கநல்லூர், மயிலாப்பூர், சேத்துப்பட்டு, தியாகராய நகர், கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களில் பெரியார் சிலைகளுக்கு சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மாலை அணிவித்தனர். சூளைமேடு, பச்சையப்பாஸ் கல்லூரியின் பின்புறத்தில், வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வ. வேலுவின் முயற்சியில் கழகக் கொடிக்கம்பம் அமைக்கப்பட்டது. சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி கொடியேற்றினார். தோழர்களுக்கு மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன் - சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன் - ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஆ.வ.வேலு - இராவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, மாவட்ட அமைப்பாளர் இளவரசன், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ், மயிலை தோழர்கள் சுகுமார், மனோகர், சிவா, பகுதி அமைப்பாளர்கள் எம்ஜிஆர் நகர் துரை, சைதை சிவா, முழக்கம் உமாபதி, ராஜன், விஜயன், மாணவர் கழக வடசென்னை மாவட்ட அமைப்பாளர் குடிஅரசு, ஏசு குமார், சு. பிரகாஷ், லீலா, குறளரசி, திரிபுரசுந்தரி, சிகாமணி, புகழேந்தி, சுரேஷ், திருவல்லிக்கேணி செந்தில், வேளச்சேரி செந்தில், அசோக், தமிழ்ச்செல்வன், கொரட்டூர் ராஜேந்திரன், சித்தார்த்தன், மோகன், பரதன், ஜேம்ஸ், வீரா, நிரஞ்சன், அஜித், நாகேந்திரன், பிரபாகரன், கனிகா செல்வன், காவை இளவரசன், கார்த்தி ராஜேந்திரன், நங்கநல்லூர் வெங்கடேசன், திருவல்லிக்கேணி லட்சுமணன், தாமரை, ராயப்பேட்டை சுரேந்தர், பல்லாவரம் சுரேந்தர், புழுதிவாக்கம் அருண், ஓம்பிரகாஷ், வேலழகன், வீரமணிகண்டன், வேளச்சேரி ராஜா, மருத்துவர் கணேஷ், நங்கை சுகுமாரன், தினகரன், மயிலை உதயா உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர். அனைத்து ஜாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத் தலைவர் ரங்கநாதன், திமுக மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என். துரை ஆகிய தோழமைகளும் பங்கேற்றனர்.



**கோவை:** மாநகர கழகத்தின் சார்பில் அன்று சதீஷ் தலைமையில் சிவானந்த காலனி பவர் ஹவுஸ், ஹலோ சத்தியமூர்த்தி தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பும், சிவராசு தலைமையில் சவுரிபாளையம் டிட்டோ ஸ்டுடியோ முன்பும், நிலவழகன் தலைமையில் உப்பிலிபாளையம் பகுதியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். இறுதியாக தோழர்கள் அனைவருக்கும் நிலவழகன் இல்லத்தில் தேநீர் வழங்கினார்.



**திருச்சி:** மாவட்டக் கழகம் சார்பாக திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற வன அலுவலர் பெரியாரின் பெருந்தொண்டர் கோவிந்தசாமி தலைமையில், ஓய்வு பெற்ற வன அலுவலர் மனோகரன் முன்னிலையில் திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தோழர் லதா ஆகியோர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்களை எழுப்பினர். இந்நிகழ்வில் தோழர்கள் இந்திரா, சத்யா, டார்வின் தாசன், குணராஜ், மணிகண்டன்,சர்மிளா, முருகானந்தன், பிரியதர்ஷன், அசோக், மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காரைக்குடியில் விளையாட்டுப் போட்டிகள்



சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில், இரண்டு முக்கிய நிகழ்வுகளாக எழுச்சியுடன் நடத்தப்பட்டது. காரைக்குடி மாநகர் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலைக்கு அபிநயா மாலை அணிவித்தார். மாவட்டச் செயலாளர் பெரியார் முத்து, மாவட்டத் தலைவர் முத்துக்குமார், தோழர்கள் ரமேஷ், இளங்கோவன், நதியா, வினோத் ராஜா, அன்பரசு, திருநாவுக்கரசு மற்றும் பலர் கலந்துகொண்டனர். தொடர்ந்து, இயக்கத் தோழர் இளங்கோவன் இல்லத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, திமுக தலைமைக்கழகப் பேச்சாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. திமுக ஒன்றியச் செயலாளர் டாக்டர் கே.எஸ். ஆனந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். விழாவில், பெரியார் முத்து, சமதர்ம குடியரசு கழகத்தின் அம்பேத்கர் பிரியன் உள்ளிட்ட பலர் சிறப்புரையாற்றினார்கள். திமுகவைச் சார்ந்த கவுன்சிலர் காளீஸ்வரன் மற்றும் திமுகவின் பல்வேறு நிலை பொறுப்பாளர்கள், தமிழக மக்கள் முன்னணி மணிமாறன், எழுத்தாளர்.முனைவர் மோகன், குடியிருப்பு நல சங்கத் தலைவர் கண்ணன், செயலாளர் குணசேகரன் மற்றும் தோழர்கள் பழனிச்சாமி, அருள்ஜோதி, அன்பு, சசிக்குமார், சுசீலா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். நிறைவாக சரவணன் நன்றி கூறினார். காரைக்குடி பனந்தோப்பு பகுதியில், 5-வது ஆண்டாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சிறப்புப் பரிசாக கழக வெளியீடுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை மாநகர அமைப்பாளர் ரமேஷ் செய்தார்.

**திருப்பூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் காலை 9.30 மணியளவில் கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலையில் திருப்பூர் ரயில் நிலையம் முன்பு உள்ள பெரியார்



அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பெரியார் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் சரஸ்வதி, தோழர். ஸ்ரீஜா ஆகியோர் மாலை அணிவித்தனர். முழக்கங்களை மாநகரத் தலைவர் தனபால் முழக்கமிட தோழர்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்தனர். உறுதிமொழியை தமிழ்நாடு மாணவர் கழகம் பல்லடம் தேன்மொழி வாசித்தார். நிகழ்வில் கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகரத் துணைத் தலைவர் மாரிமுத்து, தெற்குப் பகுதி அமைப்பாளர் ராமசாமி, பல்லடம் சண்முகம், ஹரிஷ் குமார், ரூபா, காளியம்மாள், ராஜசிங்கம், இனியவன், ரவி , சுபாஷ், குணா ,ராஜ்குமார், மதன், பெரியார் பிஞ்சு இராவணன், கருணாநிதி, ஸ்டாலின், சிபிஎம் திருப்பதி ஆகியோர் பங்கேற்றனர்.

## குமாரபாளையத்தில் இருசக்கர வாகனப் பேரணி

குமாரபாளையத்தில் இருசக்கர வாகனப் பேரணியாகச் சென்று அரசு அலுவலகங்களில் இனிப்புடன் கூடிய வாழ்த்து அட்டை வழங்கினர். இருசக்கர வாகன ஊர்வலம் குமாரபாளையம் காவேரி நகரில் தலைமைக் குழு உறுப்பினர் கேப்டன்.அண்ணாதுரை தலைமையில் மாவட்டச் செயலாளர் மு.சரவணன், மாவட்ட அமைப்பாளர் அ.முத்துப்பாண்டி, மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. நகரச் செயலாளர் சே.வடிவேல்



தலைமை ஏற்க நகரத் தலைவர் மீ.தா தண்டபாணி இருசக்கர வாகனப் பேரணியை துவக்கி வைத்தார். குமாராபாளையம் பேருந்து நிலையத்தில் பெரியார் படத்தை திறந்து வைத்தார். ஆட்டோ நிறுத்தத்தில் கலை. கார்த்தி பெரியார் படத்தை திறந்து வைத்து இனிப்பு வழங்க தோழர்கள் முழக்கமிட்டனர். அனைவருக்கும் வாழ்த்து அட்டையும் இனிப்பும் வழங்கப்பட்டது. காவல் நிலையம் சென்று அங்குள்ள அனைவருக்கும் வாழ்த்து அட்டை வழங்கினர்.

நகராட்சி அலுவலகம் எதிரில் நகரத் தலைவர் செல்வி ஜெராக்ஸ் கடையில் பெரியார் படத்தைத் திறந்து வைத்து, ரேணுகா (திமுக) மாலை அணிவித்தார். தாசில்தார் அலுவலகம் அருகில் உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு பிரபாகரன் மாலை அணிவித்தார். இந்தி எதிர்ப்பு போரில் உயிர் நீத்த மொழிப்போர் தியாகிகள் நினைவுத் தூணுக்கு மாலை அணிவித்தனர். அரசு கலை அறிவியல் கல்லூரி எதிரில் உள்ள காமராஜர் சிலைக்கு வசந்த் மாலை அணிவித்தார். ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேவி-மாதேஷ் குடும்பத்தார் குளிர்பானம் வழங்கினர். தந்தை பெரியார் சமத்துவபுரத்தில் உள்ள சிலைக்கு சுதாமணி ராஜ் மாலை அணிவித்தார். தலைமைக் கழகப் பேச்சாளர் நங்கவள்ளி அன்பு வாழ்த்துரை வழங்கினார். விவேகானந்தன் அனைவருக்கும் நன்றி கூறினார். பா.செல்வம், தேமுதிக பொறுப்பாளர் மகாலிங்கம் உணவு ஏற்பாடு செய்தார். பள்ளிபாளையம் நகரச் செயலாளர் பிரகாஷ், நகரத் தலைவர் நாகராஜ், கோபி காளிப்பட்டி பெரியண்ணன், ஓவியர் பழனிச்சாமி, பவானி பூபதி, சங்ககிரி தலித் குமார், அண்ணாதுரை, திருச்செங்கோடு மனோஜ், காவிரி நகர் செல்வம், ரேணுகா, திராவிட மணி, மணியம்மை கார்த்தி, குமார், தி.க மாவட்டக் காப்பாளர் ஆக்கு குமார், தி.க மாவட்டத் தலைவர் சு.சரவணன், தமிழரசன், எம். ஜி.ஆர் நகர் வடிவேல், கண்ணகி ஆகியோர் குடும்பத்துடன் பங்கேற்றனர். அனைவருக்கும் இனிப்புகள், பொங்கல் வழங்கி சிறப்பித்தனர். 27 ஆம் தேதி தலைவர் கொளத்தூர் மணி பங்கெடுக்கும் குமாரபாளையம் பொதுக்கூட்டத்தை சிறப்பாக நடத்துவது குறித்து தோழர்கள் ஆலோசனை நடத்தினர்.

**திருச்செங்கோடு:** நகர கழகம் சார்பில் காலை 9 மணியளவில் பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. நகரத் தலைவர் பூபதி தலைமையில் அண்ணா சிலை அருகில் கழக ஏற்பாட்டில், திமுக, தமிழ்ப் புலிகள் கட்சி, தி.க உள்ளிட்ட அமைப்புகள் சமூக நீதிநாள் உறுதிமொழி ஏற்றனர். திமுக நகர கழகத் தலைவர் கார்த்திகேயன், நடேசன், நகராட்சி மன்றத் தலைவர் நளினி, சுரேஷ்பாபு மற்றும் திமுக தோழர்கள் ஆகியோரும், தமிழ்ப் புலிகள் மாநில துணைப் பொதுச் செயலாளர் சொல்வ வில்லாளன் உள்ளிட்ட தோழர்களும் கலந்து கொண்டனர்.

(பெரியார் பிறந்தநாள் செய்திகள் அடுத்த இதழிலும் தொடரும்)

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# GenZ இளைஞர்களும் பெரியாரும் கோவையில் கருத்தரங்கம்

தந்தை பெரியாரும் GenZ இளைஞர்களும் என்ற தலைப்பில் கோவை மாவட்ட கழகம் சார்பில் 19.09.2026 அன்று மாலை 5.00 மணி அளவில் கோவை ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள திருமூர்த்தி லே அவுட்டில் கருத்தரங்கம் நடைபெற்றது. கோவை மாநகர அமைப்பாளர் நவீன்குமார் தலைமை வகித்தார். கோவை மாநகரத் துணைத் தலைவர் சக்தியமூர்த்தி வரவேற்புரையாற்றினார். சவுந்தர்யா, நிலவழகன், கதிரவன், சுதர்சன், அப்ரித் ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர்.



அன்னூர் விஷ்ணு பேசுகையில், GenZ இளைஞர்களுக்கும் தமிழ்நாட்டு அரசியலுக்கும் ஒரு நெடிய தொடர்பு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், வாளாடி பெரியசாமி உள்ளிட்ட தலைவர்கள் எல்லாம் தன்னுடைய மாணவர் பருவத்திலேயே பொது வாழ்விற்கு வந்தவர்கள். தன்னை தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக ஒப்படைத்துக் கொண்ட மகத்தான GenZ இளைஞர்கள்தான். இவர்களை இளைஞர்களாகிய நம்மோடு இணைத்தவர் தலைவர் தந்தை பெரியார் என்பதையும் விரிவாகப் பேசினார்.

எழுத்தாளர் பாமரன் பேசுகையில் இளைய தலைமுறை இளைஞர்கள் அரசியல் தெளிவு இல்லாமல் இருப்பவர்களை நாம் கேலி செய்யாமல் அவர்களுக்கு அரசியல் தெளிவினை ஏற்படுத்த வேண்டும் எனவும், பெரியார் பற்றியும், திரைத்துறை, கலை இயக்கத்தில் திராவிடக் கொள்கை சிந்தனைகளைப் பற்றியும் இளைஞர்கள் வாழ்வில் முன்னேற முற்போக்கு சிந்தனைகளை எடுத்துக்கூறியும் சிறப்புரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் தந்தை பெரியார் மீதான விமர்சனங்களும், வரலாற்று ஆதாரங்களின்றி பொதுமக்களிடையே அள்ளிதெளிக்கும் பிற்போக்கு சக்திகளின் அவதூறுகளைப் பற்றிய கேள்விகளுக்கும், இட ஒதுக்கீடு வரலாறு , நீட், 10% இடஒதுக்கீடு, திராவிடர் இயக்கம் குறித்த வரலாறுகளை விளக்கிப் பேசினார்.

இளைஞர்கள், மாணவர்களின் கேள்விகளுக்கு கழகத் தலைவர் விளக்கமாக பதிலளித்தார். சாலை வழியாக செல்லும்போது வாழைப்பழத் தோலை பார்த்ததும், தாண்டி குதித்துவிட்டு அப்பாடா நாம் விழவில்லை, என மட்டும் நினைக்காமல் மற்றவர்களும் விழாமல் இருக்க, வாழைப்பழத் தோலை குப்பையில் போட்டுச் செல்லுங்கள். அப்படித்தான் நாங்களும் கொள்கை மற்றும் பொதுப்பணிகளை செய்து வருகிறோம்; நீங்களும் செய்ய முன்வாருங்கள் என இளைஞர்களிடம் கூறி நிறைவுரையாற்றினார்.

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே கெம்பனூர் அண்ணா நகருக்கு ஜாதியத் தீண்டாமையைப் பின்பற்றி அரசுப் பேருந்து 21 செல்லாமல் இருந்தது. இந்தக் கொடுமையை வெளிக் கொண்டு வந்து அதற்காக தொடர்ந்து போராடி வெற்றிபெற பெரும் பங்கு வகித்த கழக கோவை மாவட்டச் செயலாளர் பன்னீர்செல்வம், கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார், கிருஷ்ணன் ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

கழகத் தலைவர் முன்னிலையில் சவுந்தர்யா, லோகேஷ் ஆகிய தோழர்கள் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர். இறுதியாக கோவை மாநகர துணைச் செயலாளர் தரணி நன்றிகூறினார். இளைஞர்கள், மாணவ, மாணவிகள் என 70-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# சேலத்தில் கருப்பு உடையுடன் நடை பேரணி

**முதல் பக்க தொடர்ச்சி..**

இளைஞர்கள் மற்றும் மகளிர் படை சூழ, எழுச்சியுடன் பெரியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது. காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதல் நிகழ்வாக இயக்கத்தின் 15 ஆம் ஆண்டை குறிக்கும் வகையில் பெரியார் உருவம் பொறித்த பேட்ச் அணிந்து நடைபேரணி தொடங்கியது. இந்த பேரணியில் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு கொள்கை முழக்கங்களை எழுப்பினர்.







தந்தை பெரியார் சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் மாலை அணிவித்தனர். கழகத் தோழர்கள் அனைவரும் சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை தலைமையில் கழக வெளியீடுகளான 'தடை அதை உடை' என்ற தலைப்பில் - 300 புத்தகங்கள், 'பேய் - பில்லி-சூனியம் -ஜாதகம்-தீ மிதித்தல்' 200, கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய 'EWS இட ஒதுக்கீடு 68 ஆண்டுகள் கழித்து வஞ்சம் தீர்த்த உயர்ஜாதியினர்' - 100 புத்தகங்கள், பெண் ஏன் அடிமையானாள் -20 புத்தகங்கள் என 4 தலைப்பில் மொத்தம் 620 புத்தகங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் 1000 துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. விழாவிற்கு வருகை புரிந்த அனைத்து தோழர்களுக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. பெரியாரின் பொன்மொழிகள் மற்றும் சமூக நீதி நாள் உறுதிமொழி துண்டறிக்கைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. பல்வேறு இயக்கத் தோழர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் கழக வெளியீடுகளை ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

### அமைச்சர் தமிழன் பார்த்திபனுடன் சந்திப்பு

இந்நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த நேரம் அங்கு வந்த போக்குவரத்து துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன் அவர்கள் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் அவர்களை சந்தித்து அவருடனான 25 வருட நட்பு குறித்தும் இயக்கங்களின் போராட்டங்கள் குறித்தும் தோழர்களுடன் கலந்துரையாடினார். அவருக்கு கழக வெளியிடுகள் வழங்கப்பட்டது. கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் மற்றும் மாநகரத் தலைவர் பாலு மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.

பிரபாத் பகுதியைச் சேர்ந்த கலைவாணன் என்ற தோழர் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பெரியார் சிலையிலிருந்து வாகனப் பேரணியை மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் தொடங்கி வைத்தார். வாகனப் பேரணி சேலம் மாநகரம், கே.ஆர்.தோப்பூர், பவளத்தானூர், தாரமங்கலம் வழியாக இளம்பிள்ளையில் நிறைவடைந்தது. சேலம் மாநகரத்தில் மொத்தம் ஒன்பது இடங்களில் படத்திறப்பு நிகழ்வு நடைபெற்றது.

தேநீர் விருந்தை வீரமணி வழங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றி முருகன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் சேலம் நெத்திமேடு துவக்கப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

**சேலம் மாநகரம்:** அம்மாபேட்டை பகுதியில் உள்ள பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்தனர். பிரபாத், அருணாச்சலம் மெயின் ரோடு, அன்னதானப்பட்டி, உத்திரப்பன் நகர், மணியனூர், நெத்திமேடு, குரங்கு சாவடி , சேலம் ஜங்சன் ஆகிய பகுதிகளில் பெரியாரின் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. தமிழீழ மக்களுக்காக தன்னுயிர் தந்த தியாகச் சுடர் விஜயராசு படத்திறப்பு மற்றும் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

**சிந்தாமணியூர் நகரம்:** சிந்தாமணியூர் பகுதியில் பாரப்பட்டி முருகேசன் கழகக் கொடியை ஏற்றினார். பாரப்பட்டி பகுதியில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தனர்.

**தாரமங்கலம் ஒன்றியம்:** கே.ஆர்.தோப்பூர், பவளத்தானூர் ஆகிய பகுதிகளில் பெரியாரின் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. தாரமங்கலம் ஒன்றியச் செயலாளர் சரவணன் தோழர்கள் அனைவருக்கும் தேநீர் மற்றும் பழச்சாறுகள் வழங்கினார். தாரமங்கலம் அண்ணா சிலை அருகில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. மதிய உணவாக மாட்டுக்கறி பிரியாணியை இளம்பிள்ளை நகர கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**இளம்பிள்ளை நகரம்:** கோனேரிப்பட்டி பகுதியில் சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் ,கறிக்கடை பஸ் ஸ்டாப் பகுதியில் இளம்பிள்ளை மோகன்ராஜ் ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றினர். இளம்பிள்ளை பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. முருங்கப்பட்டி, பெத்தாம்பட்டி, நல்லாக்கவுண்டனூர் ஆகிய பகுதிகளில் பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்தனர். இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வெற்றி முருகன் நன்றி கூற விழா நிறைவடைந்தது. அனைத்து தோழர்களுக்கும் இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ் தேநீர் விருந்து அளித்தார்.

### குடிநீரை தனியார் மயமாக்காதே

குடிநீரை தனியார் மயமாக்கும் சேலம் மாநகராட்சியைக் கண்டித்து கழகத் தலைவரின் ஒப்புதல் பெற்று இம்மாத இறுதிக்குள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என அனைத்து தோழர்களும் ஒருங்கிணைந்து முடிவெடுத்தனர். சேலம் கிழக்கு மாவட்ட நகர, ஒன்றிய, கிளைக் கழகங்கள் முழுவதும் பெரியார் பிறந்தநாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. இந்நிகழ்வில் சேலம் கிழக்கு மாவட்ட தோழர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : september 24 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran